Deutsch– Tamilische Gesellschaft e. V.

# தமிழாலயம் பேர்லின் - யேர்மனி

Thamilalayam Berlin - Germany

# தமிழ்த்திறன் போட்டி 2019

## மனனப் போட்டிகளுக்கான தொகுப்பு

ஆத்திசூடி

கொன்றைவேந்தன்

நறுந்தொகை

திருக்குறள்

# உள்ளடக்கம்


1) {6} வயதுப்பிரிவுக்கு ஆத்திசூடி

2) {7–8} வயதுப்பிரிவுக்கு ஆத்திசூடி

3) {9–10} வயதுப்பிரிவுக்கு கொன்றைவேந்தன்

4) {11–12} வயதுப்பிரிவுக்கு நறுந்தொகை

5) {13–14} வயதுப்பிரிவுக்கு திருக்குறள்: மருந்து

6) {15–16} வயதுப்பிரிவுக்கு திருக்குறள்: நட்பு

7) {17–18} வயதுப்பிரிவுக்கு திருக்குறள்: கல்லாமை

# ஆத்திசூடி

(வயதுப்பிரிவு 6)

1. அறஞ் செய்ய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு

# ஆத்திசூடி

(வயதுப்பிரிவு 7-8)

1. **அறஞ் செய்ய விரும்பு**
   - ☞ நற்காரியங்களைச் செய்வதற்கு ஆசைப்பட வேண்டும்.
2. **ஆறுவது சினம்**
   - ☞ கோபத்தைத் தணியச்செய்ய வேண்டும்.
3. **இயல்வது கரவேல்**
   - ☞ இயன்றதை ஒளிக்காமல் செய்ய வேண்டும்.
4. **ஈவது விலக்கேல்**
   - ☞ பிறருக்கு உதவி செய்வதைத் தடுக்கக்கூடாது.
5. **உடையது விளம்பேல்**
   - ☞ உன்னிடம் இருக்கும் மறைக்க வேண்டியுள்ள இரகசியத்தை பிறரிடம் சொல்லாதே.
6. **ஊக்கமது கைவிடேல்**
   - ☞ செயலில் ஈடுபடும் பொழுது தடங்கல் ஏற்படுமானால் அதைக் கண்டு தைரியத்தைக் கைவிடக் கூடாது.
7. **எண் எழுத்து இகழேல்**
   - ☞ கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து ஒதுக்கக் கூடாது.
8. **ஏற்பது இகழ்ச்சி**
   - ☞ பிறரிடம் போய் பிச்சையெடுப்பது இழிவான செயலாகும்.
9. **ஐயம் இட்டு உண்**
   - ☞ பிச்சை கேட்பவர்க்கு உணவு கொடுத்த பின்னர் சாப்பிட வேண்டும்
10. **ஒப்புரவு ஒழுகு**
    - ☞ உலக அனுபவத்தை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்.

# கொன்றைவேந்தன்

(வயதுப்பிரிவு 9-10)

**1. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்**

☞ கணக்கும் இலக்கியமும் கண்களைப் போல சிறப்பானவை.

**2. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை**

☞ குற்றம் குறைகளையே சொல்லிக் கொண்டிருந்தால் சுற்றத்தார் என யாருமே இருக்கமாட்டார்.

**3. கைப் பொருள் தன்னில் மெய்ப் பொருள் கல்வி**

☞ கைவசம் இருக்கும் செல்வத்தைக் காட்டிலும் கல்வியே நிரந்தரமான உண்மையான செல்வமாகும்.

**4. சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு**

☞ தன்னுடைய பிள்ளைகளை உலகத்தார் அறிஞர் என்று போற்றுவதே தாய்க்குச் சிறப்பாகும்.

**5. தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை**

☞ தகப்பனார் கூறும் அறிவுரைக்கு மிஞ்சிய சாத்திரம் வேறு இல்லை.

**6. தாயிற் சிறந்து ஒரு கோயிலும் இல்லை**

☞ தாயையே வணங்க வேண்டும், அதற்கு மேலான கோயில் எதுவுமே இல்லை.

**7. திரை கடல் ஓடியும் திரவியம் தேடு**

☞ அலைகடலுக்கு அப்பால் சென்றாவது பொருள் தேட வேண்டும்.

**8. தோழனோடும் ஏழைமை பேசேல்**

☞ நெருங்கிய நண்பனிடத்திலும் கூட வறுமை நிலையைச் சொன்னால் மிகவும் கேவலமாக நினைப்பான்.

**9. நல் இணக்கம் அல்லது அல்லல் படுத்தும்**

☞ நல்லவர்கள் தொடர்பு நன்மையாகும், கெட்டவர்கள் தொடர்பு தீமையாகும்.

**10. நாடு எங்கும் வாழக்கேடு ஒன்றும் இல்லை**

☞ தேசம் பூராவும் செழித்துத் தழைத்தால் துன்பமே இல்லை.

**11. நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை**

☞ நிலையான கல்வி கற்றவர் என்பவர் வாக்குறுதி உள்ளவரே ஆவர்.

**12. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி**

☞ மிகச் சிறியசெயலானாலும்கூட தீர யோசித்தே செய்யவேண்டும்.

**13. பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்**

☞ பாலினால் தயாரித்த உணவுப் பொருளானாலும் நேரம் தவறி சாப்பிடக் கூடாது.

**14. பையச் சென்றால் வையம் தாங்கும்**

☞ மெதுவாகச் செய்யக் கூடிய செயல் வெற்றி அளிக்கும்.

**15. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்**

☞ முன் பகுதியில் யாருக்கேனும் தீங்கு செய்திடில் பிற்பகுதியில் தனக்கே தீங்கு நேரிடும்.

**16. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்**

☞ அறிவு சான்ற பெரியோர்கள் சொல்லும் அனுபவ மொழிகள் அமிர்தம் போன்றவை ஆகும்.

**17. உரவோர் என்கை இரவாது இருத்தல்**

☞ அறிஞர் எனக் கூறப்படுவோர் எவரிடமும் சென்று யாசியாமல் இருப்பதே சிறப்பு.

**18. ஊக்கம் உடைமை ஆக்கத்துக்கு அழகு**

☞ மனம் தளராமல் உறுதியோடு இருப்பது செழிப்புக்கு உயர்வாகும்.

**19. வைகல் தோறும் தெய்வம் தொழு**

☞ நாள் தோறும் கடவுளை வணங்குதல் நன்மை தரும்.

**20. ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்**

☞ நீதி நூல்களைப் படிக்காதவர்களுக்கு நல்லொழுக்க அறிவு இருக்காது.

# நறுந்தொகை

(வயதுப்பிரிவு 11-12)

1. **எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்**
   - எழுத்துக்களை, கல்வியை முதலில் கற்றுத் தந்தவர் தெய்வத் தன்மையானவர்.

2. **கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்**
   - கல்வி கற்றதற்குச் சிறப்பு, குற்றம் இல்லாமல் தெளிவாகப் பேசுதல் ஆகும்.

3. **செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்**
   - பணக்காரர்களுக்குச் சிறப்பு, தங்கள் உறவினர் துன்புறும்போது தகுந்த உதவி அளித்து ஆதரிப்பது.

4. **மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை**
   - அரசர்க்குச் சிறப்பு, நீதி வழுவாமல் ஆட்சி புரிவது.

5. **வைசியர்க்கு அழகு வளர் பொருள் ஈட்டல்**
   - வியாபாரிக்குச் சிறப்பு, நேர்மையாகப் பொருள் சம்பாதிப்பது.

6. **உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்**
   - உணவுக்குச் சிறப்பு, விருந்தாளிகளுடன் அமர்ந்து உண்பது.

7. **அறிஞர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல்**
   - அறிவாளிகளுக்குச் சிறப்பு, கற்று அறிந்து அடக்கமாக இருப்பது.

8. **வறிஞர்க்கு அழகு வறுமையில் செம்மை**
   - தரித்திர நிலைமையில் இருந்த போதிலும் அப்பொழுது நேர்மையோடு இருப்பது சிறப்பாகும்.

9. **அரைக்கினும் சந்தனம் தன் மணம் மாறாது**
   - சந்தனக் கட்டையை எவ்வளவு அரைத்தாலும் அதன் மணம் குறையாது.

10. **கலக்கினும் தண் கடல் சேறு ஆகாது**
    - சமுத்திரத்தை எவ்வளவு கலக்கினாலும் சேறு ஆகாமல் தெளிவாக இருக்கும்.

**11. சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம்**
**பெரியோர் ஆயின் பொறுப்பது கடனே**

- சிறுவர்கள் அறியாமல் செய்த தவறுகளை எல்லாம் பெரியவர்கள் பொறுத்துக் கொள்வது கடமை ஆகும்.

**12. நூறு ஆண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை**
**நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாதே**

- முரடர்களோடு நூறு ஆண்டுகள் பழகினாலும், அந்தப் பழக்கமானது நீரிலுள்ள பாசிபோல் காணப்படுமே ஒழிய, வேர் கொள்ளாது.

**13. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை**
**இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே**

- பெரியார்களுடன் ஒருநாள் பழகிய போதிலும் அந்தப் பழக்கமானது பூமிக்குள் வேர் விடுவது போன்றது ஆகும்.

**14. கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே**

- கல்வி பயில்வது நன்மையே தரும், பிச்சை எடுக்க நேரிட்டாலும் கல்வி கற்பது நன்மையே அளிக்கும்.

**15. அறிவுடை ஒருவனை அரசும் விரும்பும்**

- அறிவுடையோரை அரசும் விரும்பும் மதிக்கும்.

**16. அச்சமும் நாணமும் அறிவு இல்லோர்க்கு இல்லை**

- அறிவு இல்லாதவர்கள் தீமையைக் கண்டு பயப்படமாட்டார்கள். பழியைக் கண்டு நாணமாட்டார்கள்.

**17. கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை**

- கெட்டுப் போனவர்களுக்கு நண்பர்களோ சுற்றத்தார்களோ இல்லை.

**18. உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா**

- செல்வமும் வறுமையும் ஒரு இடத்திலே நிற்பது இல்லை.

**19. இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே**

- வசதி உடையோர் யாசிப்பவர்க்கு கொடுப்பதும் கடமையே.

**20. தறுகண் யானை தான் பெரிது ஆயினும்**
**சிறுகண் மூங்கில் கோலுக்கு அஞ்சுமே**

- வீரம் மிக்க யானை பெரிதாக இருந்தாலும் சிறு கணுக்களுடைய மூங்கில் கோலுக்குப் பயன்படும்.

## திருக்குறள்

(வயதுப்பிரிவு 13-14)

## மருந்து

**941.**

**மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.**

மருத்துவ நூல் வல்லார் வாதம் முதலாக (வாதம், பித்தம், கபம்) வகுத்துச் சொல்லும் மூன்றும் உடம்புக்கு ஏற்ற அளவில் இல்லாமல் மிகுமானாலும் குறையுமானாலும் நோயை உண்டாக்கும்.

**942.**

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.**

ஒருவன் முன்வேளை உண்ணப்பட்டது சீரணித்த அளவை அறிந்து, பின் உண்பானாயின், அவனது உடம்புக்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை

**943.**

**அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.**

முன் உணவு செரித்ததை அறிந்து, பின் உணவை அது செரிக்கும் அளவறிந்து, உண்ண வேண்டும் அவ்வாறு செய்தால், உடம்பை நெடுங்காலம் போற்றி வாழலாம்.

**944.**

**அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.**

முன் உண்ணப்பட்ட உணவு செரித்ததனை அறிந்து, தன் உடம்போடு மாறுபடாத உணவுகளைத் தெளிவாக அறிந்து நன்றாகப் பசித்தபின் உண்ணுதல் வேண்டும்.

**945.**

**மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.**

உடம்போடு மாறுபடுதல் இல்லாத உணவினை அளவோடு உண்பாராயின், அவரது உயிர்க்கு நோயினால் துன்பம் உண்டாகாது.

**946.**

**இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்.**

குறைவாக உண்பவனிடத்தில் இன்பம் நிலைத்து நிற்றல்போல, மிகுதியாக உண்பவனிடத்தில் நோய் நீங்காமல் நிற்கும்.

**947.**

**தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.**

ஒருவன் தன் வயிற்றுச் சூட்டின் அளவினை அறி யாமல் அதிக உணவை உட்கொண்டால், நோய்கள் அளவில்லாமல் உண்டாகும்.

**948.**

**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.**

நோய் தணிக்கும் மருத்துவன் நோயை இன்னதென்று அறிந்து, நோயின் காரணத்தை ஆராய்ந்து, அதைத் தீர்க்கும் வழியையும் அறிந்து; பிழைபடாமல் செய்தல் வேண்டும்.

**949.**

**உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்.**

மருத்துவம் கற்றவன் நோயாளியின் நிலை, நோயின் அளவு, மருந்து கொடுக்கும் காலம் அறிந்து மருத்துவம் செய்யவேண்டும்.

**950.**

**உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து.**

நோயாளி, நோயைத் தீர்க்கும் மருத்துவன், அவனுக்கு உதவி யாகிய மருந்து; அம்மருந்தை அருகில் இருந்து தருபவன் என்று அந்த நான்கு பகுதியை உடையது மருத்துவ முறையாகும்.

# திருக்குறள்
(வயதுப்பிரிவு 15-16)
நட்பு

**781**

**செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.**

நட்புப் போலச் செய்து கொள்ளுதற்கு அரிய பொருட்கள் எவை உள்ளன? அதைப்போல் பகைவர் செயலைத் தடுத்துக் காப்பதற்கு எவை உள்ளன?

**782**

**நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு.**

அறிவுடையவர் நட்பு சந்திரனது பிறை நிறைவது போல நாள்தோறும் வளரும் தன்மையுடையது: அறிவில்லாதவர் நட்பு நிறைமதி பின் குறைவது போல நாள்தோறும் குறையுந்தன்மை யுடையது.

**783**

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.**

நற்குணமுடையார் தம்முட் கொண்ட நட்பு, பழகும்போதெல்லாம் அவர்கட்கு இன்பம் அளித்தல், நூற் பொருள் கற்குந்தோறும் கற்பவர்க்கு இன்பம் செய்தல் போன்றதாகும்.

**784**

**நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.**

நட்புச் செய்தல் ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழ்வதற்கன்று; அவரிடத்தில் தீய செய்கை கண்டபோது, முற்பட்டுச் சென்று கண்டித்து அறிவுரை சொல்லுதற்கே யாகும்.

**785**

**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.**

நட்புக்குச் சேர்ந்திருத்தலும், பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டாம். ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுதற்குரிய உரிமையைத் தரும்.

**786**

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு.**

ஒருவருடன் முகம் மட்டும் மலரும் வகையில் நட்புக் கொள்வது நட்பன்று; அன்பால் மனமும் மலர நட்புக் கொள்வதே நட்பாகும்.

**787**

**அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு.**

நட்பாவது, கெட்ட வழியில் நண்பன் செல்வதை நீக்கி, நல்வழியில் செலுத்தி, துன்பம் வந்தவிடத்து உடனிருந்து அனுபவிப்பதே யாகும்.

**788**

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

ஆடை அவிழ்ந்தவனுடைய கை அதைப்பிடிப்பதற்கு விரைந்து செல்வதுபோலத் துன்பம் நேர்ந்துபோது விரைந்து சென்று அதனை நீக்குபவனே நண்பன் ஆவான்.

**789**

**நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**

நட்பிற்கு உயர்ந்த இடம் எது எனில், எக்காலத்தும் மாறுபாடின்றி முடிந்த வரையில் நண்பனைத் தளராமல் தாங்கும் திண்மையாகும்.

**790**

**இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல்லென்னும் நட்பு.**

'இவர் நமக்கு இவ்வளவு அன்பினர்; யாம் இவர்க்கு இத்தன்மையேம்' என்று ஒருவரை ஒருவர் புகழ்ந்து சொன்னாலும் நட்பு சிறுமையாய்த் தோன்றும்.

## திருக்குறள்

(வயதுப்பிரிவு 17-18)

### கல்லாமை

**401**

**அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய**
**நூலின்றிக் கோட்டி கொளல்.**

அறிவு நிரம்புதற்குக் காரணமான நூல்களைக் கற்காது ஒருவன், கற்றவர் உள்ள சபையில் பேசுதல் ஆட்டம் ஆட வகுக்கப்பட்ட இடமின்றிச் சூதாடியது போன்றதாகும்.

**402**

**கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்**
**இல்லாதாள் பெண்காமுற் றற்று.**

கல்வி அறிவில்லாதவன் கற்றோர் பேச விரும்புதல், இரண்டு தனங்களும் இல்லாத பெண், பெண் தன்மையை விரும்புவது போன்றதாகும்.

**403**

**கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**
**சொல்லா திருக்கப் பெறின்.**

கற்றவர் உள்ள சபையில் யாதொன்றையும் பேசா திருப்பின், கல்லாதவரும் மிக நல்லவராகக் கொள்ளப் படுவார்.

**404**

**கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்**
**கொள்ளார் அறிவுடை யார்.**

நூல்களைக் கல்லாதவனது அறிவு மிக நன்றாக விருப்பினும், அதனை அறிவுடைமையாகக் கற்றவர் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

**405**

**கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**
**சொல்லாடச் சோர்வு படும்.**

கல்லாத ஒருவன் தன்னைத் தான் மதித்துக் கொள்ளும் மதிப்பு கற்றவன் அவனைக் கண்டு உரையாட, அப்பேச்சினால் கெடும்.

**406**

**உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களரனையர் கல்லா தவர்.**

கல்லாதவர் உயிரோடிருக்கின்றார் என்று சொல்லப் படும் அளவினரே யன்றிப் பயனில்லாமையால் அவர் விளையாத உவர் நிலத்தைப் போன்றவராவர்.

**407**

**நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை யற்று.**

நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டு ஆராயும் அறிவில்லாதவனது அழகின் சிறப்பு, மண்ணால் மாண்புறச் செய்யப்பட்ட பாவையின் அழகு போன்ற தாகும்.

**408**

**நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார்கண் பட்ட திரு.**

கற்றவரிடத்தில் உண்டான வறுமையைவிடக் கல்லாத வனிடத்தில் உண்டான செல்வம் மிக துன்பத்தைக் கொடுக்கும்.

**409**

**மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்திலர் பாடு.**

கல்லாதவர் உயர் குலத்தில் பிறந்தவராயினும், கீழ்க்குலத்தில் பிறந்த கற்றவரை ஒத்த பெருமையை உடையவராகார்.

**410**

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்.**

விலங்கொடு நோக்க மக்கள் எவ்வளவு மேன்மை யுடையவரோ, அவ்வளவு தாழ்ந்தவர் நூலைக் கற்றவரோடு நோக்கக் கல்லாதவர்.

# நிறைவு